# புகைப்பிடிக்கும் சிறுவர்கள் அதிகரிப்பு



இந்தோனேசியாவில் புகைப்பிடிக்கும் சிறுவர்கள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. 3 வயதுக்கும் 15 வயதுக்குட் இடைப்பட்ட சுமார் 25 வீதமான சிறுவர்கள் புகைப்பிடிக்கும் பழக்கம் கொண்டவர்களாக இருப்பதாக ஆய்வறிக்கை ஒன்று அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது. இந்நிலையில், 2 வயதுக் குழந்தையொன்று புகைப்பதற்கு சிகரெட் கொடுக்க மறுத்ததால் தனது உணவைத் தூக்கியெறிந்த சம்பவம் ஒன்று கடந்த வாரம் நிகழ்ந்துள்ளது. முசி பான்யுயாசின் என்ற இடத்தை சேர்ந்த முகமது என்பவருக்கு 2 வயது மகன் அர்டி ரிசால் சிகரெட்டுக்கு அடிமையாகி விட்டான். இவன் 18 மாத குழந்தையாக இருந்தபோது தான் சிகரெட் பிடிக்க கற்றுக்கொண்டான். முதன்முதலாக அவனுக்கு சிகரெட்டை அறிமுகப்படுத்தியதே அவனது தந்தை தான். அவனது தந்தை முகமது கூறுகையில், அவன் புகை பிடிப்பது எனக்கு கவலை அளிக்கிறது. உடல் நலம் பாதிக்கப்படுமே என்பதால் நான் கவலைப்படவில்லை. சிகரெட்டுக்கு அவன் அடிமையாகி விட்டதை நினைத்துதான் நான் கவலைபடுகிறேன். அவனை இனிமேல் புகைபிடிக்க விடமாட்டேன் என்று குறிப்பிட்டார்.

# தாக்குதலுக்குத் தூதுபோகும் புறாக்கள்



காதலுக்கும், மன்னர்களுக்கும் தூதுபோன புறாக்கள் இப்போது, தீவிரவாதிகளுக்கும் தூதுபோகத் தொடங்கியுள்ளது. பறந்து திரிந்த வர்ணம் பூசப்பட்ட புறா ஒன்றை சந்தேகத்தின் அடிப்படையில் இந்திய ஜம்மு காவல்துறையினர் வலை வீசி பிடித்து, புறாவை சோதனை செய்தபோது, அதன் வாலில் இரண்டு செல்பேசி இலக்கங்கள் எழுதப்பட்டிருந்ததை பார்த்தனர்.-இன்னொரு பக்கம் சாஷாத், ஹாஜி சர்வார் என இரண்டு பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. அந்த எண்களுக்கு தொடர்பு கொண்டபோது, அவர்கள் தீவிரவாதிகள் எனத் தெரியவந்தது. பாகிஸ்தான் பகுதியிலுள்ள காஷ்மீரில் இருந்து இந்தியாவுக்குள் ஏற்கனவே ஊடுருவியுள்ள தீவிரவாதிகளுக்கு புறா மூலம் தகவல்களை அனுப்புவது தெரியவந்துள்ளது. அடையாளம் தெரிவதற்காக தீவிரவாதிகளுக்கு தகவல் கொண்டு வரும் புறாவுக்கு கலர் கலராக மை அடித்து அனுப்புகின்றனர். அதன் வாலில் தொடர்பு கொள்ள வேண்டிய மற்ற தீவிரவாதிகளின் பெயர்களையும் எழுதி அனுப்புகின்றனர். புறா மூலம் தீவிரவாதிகள் தொடர்பு கொள்ளும் தகவல் அனைத்து காவல்நிலையங்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து வண்ணம் பூசப்பட்ட மேலும் சில புறாக்கள் பிடிபட்டன. அவற்றின் வாலிலும் செல்பேசி இலக்கங்கள் இருந்தன. இந்தப் புறாக்கள் இதற்காகவே பழக்கப்படுத்தப்பட்டு, அனுப்பப்படுகின்றன என ஜம்மு காவல்துறையினர் தெரிவித்தனர்.

# கள்ளக்காதலை காட்டிக்கொடுத்த செல்பேசி நிறுவனம் மீது வழக்கு!



கனடா நாட்டைச் சேர்ந்த கபெரில்லா நாகி என்ற 35 வயதான பெண் செல்பேசி நிறுவனம் ஒன்றின் மீது வழக்குத் தொடர்ந்துள்ளார். தனது கணவருடன் வசித்து வந்த இவர், தன் செல்பேசிப் பாவனைக்கான சீட்டுக்களை தன் பெயருக்கு அனுப்பும்படி செல்பேசி நிறுவனத்திடம் தெரிவித்திருந்தார். ஆனால், அவரது கணவரும் அதே செல்பேசி நிறுவனத்தில் வாடிக்கையாளராக இருக்கின்றார்.-இதனால், மனைவியின் சீட்டையும், கணவனின் சீட்டையும் ஒன்றாக வைத்து கணவரின் பெயரில் செல்பேசி நிறுவனம் அனுப்பி வைத்தது. கணவர் தன் மனைவியின் செல்பேசி பாவனைச் சீட்டைப் பார்த்தபோது ஒரு குறிப்பிட்ட எண்ணுக்கு அடிக்கடி பேசியிருப்பதைக் கண்டுபிடித்தார். இதை விசாரித்தபோது, அந்த எண், தன் மனைவியின் கள்ளக் காதலனுக்கு உரியது என்பதையும் கண்டுபிடித்தார். இதைத் தொடர்ந்து அவர் தன் மனைவியை விவாகரத்துச் செய்தார். இதைத் தொடர்ந்து நாகி அந்த செல்பேசி நிறுவனம் மீது வழக்குத் தொடர்ந்துள்ளார். தனது கணவர் விவாகரத்துச் செய்வதற்கு காரணமான செல்பேசி நிறுவனம் ஒரு மில்லியன் டொலர்களை நட்டஈடாகத் தரவேண்டும் என்று கூறியுள்ளார்.

# 221 ஆண்டுகளுக்கு பிறகு திரும்பிவந்த புத்தகம்




அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியாக இருந்தவர் ஜோர்ஜ் வாஷிங்டன். இவர் ஜனாதிபதியாக இருந்தபோது, அரசாங்க தலைமைச் செயலகமும், நூலகமும் நியூயோர்க் நகரில் ஒரே கட்டடத்தில் தான் செயல்பட்டு வந்தன. ஜோர்ஜ் வா‘-ங்டன் அந்த நூலகத்துக்கு 1789ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5ம் திகதி சென்றார். அங்கு இருந்த புத்தகங்களை பார்வையிட்ட அவர் அவற்றில் இருந்து த லோ ஒப் நேசன்ஸ் (The Law of Nations) என்ற புத்தகத்தை இரவலாக எடுத்துச்சென்றார். அதன் பிறகு அவர் அந்த புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை.

நூலகங்களில் புத்தகம் இரவல் எடுத்து விட்டு தாமதமாக திருப்பி கொடுத்தால் ஒவ்வொரு நாளுக்கும் ஒரு குறிப்பிடட தொகை அபராதமாக விதிக்கப்பட்டு அந்த தொகை வசூலிக்கப்படுவது வழக்கம். இந்த புத்தகம் 221 ஆண்டுகளாக திருப்பி தரப்படவே இல்லை. 1789ம் ஆண்டு முதல் 1792ம் ஆண்டு வரைக்குமான புத்தகங்கள் இரவல் வாங்கியதற்கான லெட்ஜர் சமீபத்தில் தான் கிடைத்தது. அதை பார்த்தபோது தான் ஜோர்ஜ் வாஷிங்டன் புத்தகத்தை இரவல் வாங்கி விட்டு அதை திருப்பி செலுத்தாமல் இருப்பது தெரியவந்தது. புத்தகம் திரும்பத் தரப்படாததற்கான தண்டப்பணமாக 3 இலட்சம் டொலர்கள் அறிவிடமுடியும் எனவும் கணக்குப் பார்க்கப்பட்டிருந்தது. எனினும், இந்தப் புத்தகம் காணாமல் போனது இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. சமீபத்தில் இந்த நூலகம் பற்றிய கட்டுரை நியுயோர்க் ரைம்ஸ் இதழில் வெளியானபோது தான் இரவல் வாங்கி விட்டு திருப்பி கொடுக்காமல் போன விவரம் வெளியே வந்தது. இந்த தகவலை பத்திரிகையில் படித்த வாஷிங்டனின் வீட்டில் உள்ள ஊழியர் ஒருவர் நூலகர்களை தொடர்பு கொண்டு, காணாமல் போன புத்தகத்தின் இன்னொரு புதிய பிரதியை வாங்கி த்தருவதாக தெரிவித்தார். புதிய புத்தகம் கடந்த 19ம் திகதி நூலகத்தில் திரும்ப கொடுக்கப்பட்டது.

# பணம் எடுக்கும் இயந்திரத்தை கண்டுபிடித்தவர் மரணம்!




உலகின் முதல் பணம் எடுக்கும் (ஏடிஎம்) தானியங்கி இயந்திரத்தை கண்டுபிடித்த ஷெப்பர்டு பரன் மரணமடைந்துள்ளார். 84 வயதான இவர் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர். எடின்பரோ மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் படித்த அவர், ஒருமுறை அவசரத் தேவைக்காக வங்கியில் பணம் எடுக்கச் சென்றார். அப்போது வங்கி பூட்டியிருந்ததால் அவருக்கு ஏமாற்றம் ஏற்பட்டது. தன்னைப் போலவே பலரும் அவரசத் தேவைக்கு உடனே பணம் எடுக்க முடியாமல் அவதிப்படுவதை அவர் உணர்ந்தார். இப்பிரச்னைக்கு தீர்வுகாண, தானாகவே பணம் வழங்கும் இயந்திரத்தை கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றியது. அவரது எண்ணத்தின் செயல் வடிவமே இப்போது தெருவுக்கு தெரு முளைத்திருக்கும் பணம் வழங்கும் இயந்திரங்கள்.-1967ம் ஆண்டு யூன் 27ம் திகதி வடக்கு இலண்டனில் பார்கிளேஸ் வங்கிக் கிளையில் இவர் கண்டுபிடித்த பணம் எடுக்கும் முதல் இயந்திரம் பொருத்தப் பட்டது. அப்போது வங்கி அட்டை நடைமுறைக்கு வரவில்லை. இரசாயன குறியிடப்பட்ட சிறப்பு செக்கை அடிப்படையாகக் கொண்டு அந்த இயந்திரம் பணத்தை வழங்கியது. இந்த செக்கை கருவியின் ஒரு பகுதியில் வைத்துவிட்டு தனி அடையாள குறியீட்டை (பின் நம்பர்) தெரிவித்தால் மற்றொரு பகுதியில் பணம் வரும்.-மேலும், 6 இலக்க பின் நம்பரை பதிவு செய்யும் வகையில் இயந்திரத்தை வடிவமைத்திருந்தார். அதை நினைவில் வைத்துக் கொள்வதற்கு சிரமமாக இருப்பதாக அவரது மனைவி கரோலின் கூறினார். இதையடுத்து அதை 4 இலக்கமாகக் குறைத்து வடிவமைத்தார். பின்னர் வங்கி அட்டை பயன்படுத்தும் முறை அறிமுகம் செய்யப்பட்டது.-

# குழந்தைகள் அம்மாவை தேடுவது ஏன்?



குழந்தைகள் தாயிடம் அதிக பாசம் காட்டுவதை நீங்கள் பார்த்திருக்கலாம். சில குழந்தைகள் அழுவதை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் அம்மாவை பார்த்தாலே உடனே அழுகையை நிறுத்திவிடும். பிறந்து சில மாதங்களில் ஆட்களைப் பார்த்து இனம் காணத் தெரியாத பொழுதே தன் தாயினை குழந்தை நன்றாக அடையாளம் தெரிந்து வைத்திருக்கும். தாயின் அரவணைப்பிற்குப் பிறகே சமாதானம் அடையும். இல்லாவிட்டால் காரணமே இல்லாமல் அழுவதை நாம் பார்க்கலாம். ஆனால் இதுபோன்ற பாசத்தை தந்தையுடன் குழந்தை வெளிப்படுத்துவது கிடையாது. தாய் - குழந்தைக்கு மட்டும் அப்படி என்ன பிணைப்பிருக்கிறது- என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து வந்தனர். அதற்கான விடை கிடைத்துவிட்டது. நியூயோர்க் மாகாணத்தைச் சேர்ந்த மவுன்ட் சினாய் மருத்துவ மைய ஆய்வாளர்கள் இதைக் கண்டுபிடித்துள்ளனர். ‘ஆக்சிடாக்சின்’ என்னும் ஒருவித ஹார்மோன்கள் பெண்களின் உடலில் காணப்படுகின்றன. இவைதான் தாய் - குழந்தையின் பிணைப்பை தூண்டுகிறது. அதுமட்டுமல்லாமல் வேறு சில பணிகளிலும் இந்த ஹார்மோன்கள் பணியாற்றுகிறது. தாய்க்கு, பாலூட்டும் உணர்ச்சியை அதிகமாக்குவது, குழந்தைகளை தாயின் அருகாமையை எதிர்பார்த்து காத்திருக்க வைப்பது போன்ற பணிகளில் ஆக்சிடாக்சின் பங்கேற்கிறது.